பினாங்கு இந்து அறவாரியம்

**ஊடக அறிக்கை**

**தைப்பூசம் 2026 கொண்டாட்டம்**
19 டிசம்பர் 2025

பினாங்கு — தைப்பூசம் 2026 கொண்டாட்டத்தை முன்னிட்டு, பினாங்கு இந்து அறவாரியம்(PHEB), தண்ணீர்மலை ஸ்ரீ பாலதண்டாயுதபாணி தேவஸ்தானம் ஆலயத்துடன் இணைந்து, மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி நோயாளிகளுக்காக மலைக் கோவில் முருகன் ஆலயத்திற்கு சிறப்பு போக்குவரத்து சேவையை வழங்கும் ஒரு சிறப்பு முயற்சியை ஏற்பாடு செய்ய உள்ளது.

இந்த முயற்சி, தைப்பூசம் 2026 நிகழ்வின்போது பக்தர்கள் அதிக அளவில் கூடும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், வழிபாடு செய்யவும், நேர்த்திக்கடன் மற்றும் ஆன்மீக வேண்டுதல்களை நிறைவேற்றவும் விரும்பும் மக்களுக்கு பாதுகாப்பான முறையில் அவற்றை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், சரிவான படிக்கட்டுகளை பயன்படுத்துவதால் ஏற்படும் அபாயத்தை, குறிப்பாக மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி நோயாளிகள் மத்தியில் தவிர்ப்பதற்கும், மக்கள் நெரிசலில் எளிதில் பரவும் இன்ஃப்ளூயன்சா மற்றும் சுவாச நோய்கள் உள்ளிட்ட தொற்றுநோய்களுக்கு உட்படும் ஆபத்தை குறைப்பதற்கும் இந்த நடவடிக்கை உதவும். நிகழ்ச்சி விவரங்கள்:

**தேதி: ஞாயிற்றுக்கிழமை, 4 ஜனவரி 2026**

| நேரம் | நிகழ்ச்சி நிரல் |
|---|---|
| மாலை 3.30 | பதிவு |
| மாலை 4.30 மற்றும் அதன் பின் | மலைக் கோவில் முருகன் ஆலயத்திற்கு போக்குவரத்து |
| மாலை 5.30 | அபிஷேகம் |
| மாலை 6.30 | பூஜை |
| இரவு 7.30 | கீழே திரும்பும் போக்குவரத்து |

(கீழ்ப்பகுதியில் பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள பகுதியில் உணவு வழங்கப்படும்)

தைப்பூச சமயவிழா ஏற்பாடுகளில், குறிப்பாக மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் நலன் எப்போதும் முன்னுரிமையாகக் கருதப்படும் வகையில் பினாங்கு இந்து அறவாரியம் தொடர்ந்து தனது அர்ப்பணிப்பை நிலைநிறுத்தும்.

மேலும் தகவல்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:
பொறுப்பதிகாரி (PIC):
திரு. ஜெயராஜ் கோவல்
📞 016-490 6545

நன்றி.

மாண்புமிகு செனட்டர் டாக்டர் லிங்கேஷ்வரன் ஆர். அருணாசலம்
துணைத் தலைவர்
பினாங்கு இந்து அறவாரியம்.